தென்காசி மாவட்டத்தில்

# தையல் பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்

## கலெக்டர் துரை.ரவிச்சந்திரன் வழங்கினார்



**தென்காசி டிச.02:** தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நெட்டூரில் முதல்முறையாக மத்திய அரசின் கிராமபுற மேம்பாட்டு அமைச்சகத்தின் பங்களிப்போடு கிராமிய சுயவேலைவாயப்பு பயிற்சி நிறுவனம் மூலம் தையல் பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.பின்னர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது,

கிராமப்புற இளைஞர் இளம் பெண்களுக்கு பயிற்சியளித்து சுய வேலைவாய்ப்பை உருவாக்கிட ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய அரசின் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் பங்களிப்போடு அந்தந்த மாவட்ட முன்னோடி வங்கிகள் வாயிலாக கிராமிய சுய வேலைவாயப்பு பயிற்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது 30 மாவட்டங்களில் கிராமிய சுய வேலைவயாப்பு பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.அந்த வகையில் தென்காசி மாவட்டம் புதியதாய் துவங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது கிராமப்புற மக்களை ஊக்குவிப்பதற்காகவும், தொழில் வளர்ச்சியில் முன்னேற்றமடைய 64 வகையான நவீன பயிற்சிகள் இந்த பயிற்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே உள்ள நெட்டூர் கிராமத்தில் 35 கிராமப்புற பெண்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு தையல் பயிற்சி வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து தற்போது பயிற்சி முடித்த பெண்கள் அனைவருக்கும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வீராணம் கிளையின் மூலம் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.மேலும்,கிராமப்புற மக்களை ஊக்குவிப்பதற்காக 64 வகையான நவீன பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மாவட்டததில் விவசாயத்தை நம்பியே பல கிராமப்புற பகுதிகள் இருக்கக்கூடிய சூழ்நிலையில் மழையைச் சார்ந்து மக்கள் விவசாயம் செய்யும் நிலை உள்ளது.எனவே சுய தொழில் மூலமாக கிராமப்புற மக்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ள இது போன்ற கிராமப்புற மக்களுக்கு நவீன பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களை தொழில் முனைவோராக ஆக்கிட அரசு பல தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தருகிறது. இதனால் அவர்களுடைய வாழ்க்கை தரம் உயர்வடையும் மேலும் பயிற்சி பெற்றவர்கள் அருகில் உள்ளவர்களையும் பயிற்சியில் சேர்ந்து வாழ்க்கையில் உயர்வதற்கான வழி வகைகளை எடுத்துரைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் தெரிவித்தார்.

இந் நி க ழச் ; சி யில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கணேசன், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் .திவ்யா மணிகண்டன், தென்காசி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன இயக்குநர் ராஜேஷ்வரி, முன்னோடி வங்கி நிதி சார் கல்வியாளர் இளங்கோ, இந்தியன் ஓவர்சிஸ் வங்கி வீராணம் கிளை மேலாளர் .ராக்கேஷ், தென்காசி மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மாரியம்மாள், தாட்கோ மாவட்ட மேலாளர் ரமேஷ்குமார், நெட்டுர் ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி, துணை தலைவர் சிவசுப்பிரமணியம், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி).ராமசுப்பிரமணியன் மற்றும் திரளான கிராமப்பற பெண்கள் ஆண்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசியில் இயற்கை முறை இலவச மருத்துவ முகாம்



**தென்காசி டிச.02:** தென்காசி எல் ஆர் எஸ் பாளையம் பகுதியில் உள்ள நற்பவி நலக்கூடம் சார்பில் கலக்கோடி தெரு ரயில்வே கேட் அருகில் உள்ள வாசகர் சாலையில் வைத்து டிசம்பர் ஒன்றாம் தேதி முதல் டிசம்பர் 31ஆம் தேதி வரை ஒரு மாத காலம் மாபெரும் இலவச இயற்கை முறை மருத்துவ முகாம் நடைபெறுகிறது இம் முகம் துவக்க விழா நேற்று காலை நடைபெற்றது. இவ்விழாவிற்கு தலைமை வகித்து தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர் முகாமை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு தென்காசி காவல் ஆய்வாளர் பாலமுருகன் நகர்மன்றத் துணைத் தலைவர் சுப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக தென்காசி மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் கலந்து கொண்டார். தலைமை வகித்த நகர மன்ற தலைவர் சாதிர் பேசிய போது, பொது மக்களுக்கு மிகவும் பயன் அளிக்கும் வகையில் தென்காசி நற்பவி நலக்கூடம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த இயற்கை முறை மருத்துவ முகாமை பொது மக்கள் தவறாது பயன்படுத்திக் கொண்டு தங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் பாலமுருகன் பேசிய போது,

அனைவரும் நமது உடல் நலத்தை ஆரோக்கியமாக பராமரிப்பது இக்காலத்தில் பெரும் சவாலாக உள்ளது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் வரை நமது முன்னோர்கள் இயற்கை முறை உணவுகளை சாப்பிட்டதன் காரணமாக மிகவும் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருந்தார்கள். ஆனால் இப்போது நிலைமை தலை கீழாக மாறி உள்ளது. எனவே பெற்றோர்கள் குழந்தைகளுக்கு எதை சாப்பிட கொடுத்தால் ஆரோக்கியத்தை பேணி காக்க முடியும் என்பதை தெரிந்து கொண்டு அதனையே குழந்தைகளுக்கு வாங்கி தர வேண்டும் மேலும் குழந்தைகளுக்கு கேடு விளைவிக்க கூடிய உணவுப் பொருட்களை குழந்தைகள் அடம்பிடித்தாலும் வாங்கி தரக்கூடாது. எனவும் பெண் குழந்தைகளின் தாயார்கள் தமது பெண் குழந்தைகளை தாமே முழு பாதுகாப்புடன் வளர்க்கும் சூழ்நிலை தற்போதைய காலகட்டத்தில் உள்ளது தற்போது கூட பெற்ற குழந்தை என்றும் பாராமல் தந்தையே குழந்தைக்கு பாலியல் தொல்லை கொடுத்த சம்பவம் அரங்கேறி உள்ளது எனவே தாய்மார்கள் தங்களது பெண் குழந்தைகளை தமது சொந்த கண்காணிப்பில் வளர்ப்பது குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் என தெரிவித்தார். நிகழ்ச்சியில் நற்பவி நலக்கூடம் இயக்குனர் ஹீலர் கதிரேசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஒரு மாத காலம் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற உள்ள இந்த மருத்துவ முகாமில் இயற்கை மருத்துவம் ,நியூரோ தெரபி, பிசியோ தெரபி, வர்மம் ,அக்குபஞ்சர், அக்கு பிரஷர் ,பாத அழுத்த சிகிச்சை, டார்ன் தெரபி, மருந்தில்லா மருத்துவம் போன்ற சிகிச்சைகள் வழங்கப்படுகிறது மேலும் இங்கு வருகை தரும் அனைவருக்கும் சுகர் மற்றும் பிரஷர் இலவசமாக பரிசோதனை செய்யப் ப டு கி றது.இ யற்கை முறை மருத்துவ முகாம் என்பதால் முகாமில் பொதுமக்களுக்கு எந்தவித மருந்துகளும் வழங்கப்பட மாட்டாது என ஹீலர் கதிரேசன் தெரிவித்தார். நிகழ்ச்சியில் களக்கோடி தெரு பழனி வகையறா ஊர் தலைவர் பால்ராஜ், உடையார் தெரு உடையார் வகையறா ஊர் தலைவர் ரமேஷ், ஐந்தாவது வார்டு நகர் மன்ற உறுப்பினர் செல்வி கார்த்திகா நான்காவது வார்டு நகர மன்ற உறுப்பினர் ராம சுமதி மாரியப்பன் திமுக வார்டு செயலாளர் கதிரேசன், தென்காசி நகர திமுக பொருளாளர் சேக் பரீத் ஆகியோர் கலந்து கொண்டனர் இம் முகாமில் கலந்து கொள்ளும் பொது மக்களுக்கு பிசியோதெரபி மருத்துவர் பார்த்தசாரதி, மாற்றுமுறை மருத்துவர் ஈஸ்வரன், ஹீலர்கள் திருமலை குமார் ,கதிரேசன், கோகிலா, மனோகர், ஆகியோர் சிகிச்சை வழங்க உள்ளார்கள். நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த பரிசோதனைகளை கே ஜி மெடிக்கல் லேப் நிறுவனத்தினர் செய்கின்றனர். எனவும் எனவே பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு பயன்பெறுமாறும் நற்பவி நலக்கூடம் சார்பில் கேட்டுக் கொண்டுள்ளனர். முகாமிற்கான ஏற்பாடுகளை தென்காசி நற்பவி நலக்கூடம் மற்றும் தமிழக பத்திரிகையாளர்கள் சங்கம் தென்காசி மாவட்ட கிளை ஆகியோர் செய்திருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## அமைச்சர் உதயநிதி பிறந்த நாள் -ஔவை ஆசிரமத்தில் மதிய உணவு: மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கினார்



**தென்காசி டிச.02** கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி ஔவை ஆசிரமத்தில் மதிய உணவினை மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கினார்.

தென்காசி தெற்கு மாவட்டம், கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில், திமுக இளைஞரணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி, சிவசைலம் ஔவை ஆசிரமம் காந்தி கிராம சாந்தி செவித்திறன் குறையுடையோர் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்: மேலகரம் அரசு பள்ளி மாணவர்கள் சாதனை



**தென்காசி டிச.02:** தமிழக அரசு நடத்திய மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் மேலகரத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பங்கு பெற்று எண்ணற்ற போட்டிகளில் கலந்து கொண்டு பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளர். 12ம் வகுப்பு மாணவன் குணா 100 மீ ஓட்டப்பந்தயத்தில் இரண்டாமிடமும், நீளம் தாண்டுதலில் மூன்றாமிடமும், 11ம் வகுப்பு மாணவி கிருஷ்ணப்பிரியா வீல்சேர் ரன்னிங்கில் முதலிடமும், குண்டு எறிதலில் முதலிடமும், 10ம் வகுப்பு மாணவன் லாரன்ஸ்குமார் 100மீ ஓட்டப்பந்தயத்தில் மூன்றாமிடமும், குண்டு எறிதலில் இரண்டாமிடம், நீளம் தாண்டுதலில் மூன்றாமிடம், 8ம் வகுப்பு மாணவி துருவதர்ஷினி 100மீ ஓட்டப்பந்தயத்தில் மூன்றாமிடம், 200மீ ஓட்டப்பந்தயத்தில் மூன்றாமடம் குண்டு எறிதலில் முதலிடத்தினையும் 7ம் வகுப்பு மாணவி வினோதினி 100மீ ஓட்டப்பந்தயத்தில் முதலிடமும், நீளம் தாண்டுதலில் முதலிடம், குண்டு எறிதலில் இரண்டாமிடம் பெற்று சாதனை படைத்தனர். வெற்றி பெற்ற மாணவர்களை பள்ளி தலைமை ஆசிரியர் கவிதா, முன்னாள் தலைமையாசிரியரும் பள்ளியின் புரவலருமான சீனிவாசன், ஆசிரியர் பெருமக்கள் வாழ்த்தினர். மேலும் மாணவர்களின் வெற்றிக்கு முழுமுயற்சியெடுத்து முன்னெடுத்துச் சென்ற உடற்கல்வி ஆசிரியர்கள் துரை, செய்யது அப்துல் ரகுமான் மற்றும் சிறப்பாசிரியர்கள் மாலதி ஆகியோருக்குப் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.

# சுரண்டை ராஜேந்திரா விஸ்டம் மழலையர் துவக்கப் பள்ளியில் பறவைகள் தின விழா



**சுரண்டை டிச.02:** சுரண்டை ராஜேந்திரா விஸ்டம் மழலையர் துவக்கப் பள்ளியில் மழலையர்களால் பறவைகள் தின விழா கொண்டாடப்பட்டது. குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஸ் ராம், முதல்வர் பொன் மனோன்யா மற்றும் தலைமை ஆசிரியர் முருகராஜன் ஆகியோர் தலைமை வகித்தனர். குழந்தைகள் தாங்கள் கொண்டு வந்த பறவைகளின் பொம்மைகளை காட்சிப் படுத்தினர். மாணவர்கள் பறவைகள் போன்ற வேடம் அணிந்து பாடல் பாடி,நடனம் ஆடி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். ஆசிரியைகள் விஜயலெட்சுமி, மஞ்சுளா மற்றும் ஈஸ்வரி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# செங்கோட்டை நூலகத்திற்கு பாரத் வித்யா மந்திர் சிபிஎஸ்இ பள்ளி மாணவர்கள் வருகை



**செங்கோட்டை டிச.02:** செங்கோட்டை நூலகத்திற்கு இலஞ்சி பாரத் வித்யா மந்திர் சிபிஎஸ்இ பள்ளி மாணவர்கள் 50 பேர் வருகை தந்தனர் . மாணவர்கள் புத்தகத்தை சிறிது நேரம் படித்துவிட்டு தலா ரூ-30 செலுத்தி உறுப்பினராக இணைந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கு நூலக வாசகர் வட்ட இணைச் செயலாளர் செண்பககுற்றாலம், நூலகர் .ராமசாமி, பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். நூலகத்தின் அவசியம் குறித்து நூலகர். ராமசாமி எடுத்துரைத்தார் மாணவர்களுக்கு நூலகத்தின் அவசியத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு நூலகத்திற்கு அனுப்பி வைத்த முதன்மை முதல்வர் காந்திமதி, தாளாளர் மோகனகிருஷ்ணன், முதல்வர் உஷா ஆகியோருக்கு செங்கோட்டை நூலக வாசகர் வட்டத்தின் சார்பாக நன்றி தெரிவித்தனர்



**தென்காசி தொகுதிக்குட்பட்ட இரட்டைக்குளம் கிராமத்தில் உள்ள வாறுகாலை சீரமைப்பு செய்வதற்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் ஆய்வு மேற்கொண்டார் . இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் முத்துப்பாண்டி, நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் ராமகிருஷ்ணன், ஊராட்சி செயலர் கிருஷ்ணசாமி , ஊராட்சி கவுன்சிலர் தங்ககாளி ரத்தினம், மாவட்டம் மகளிர் காங்கிரஸ் தலைவி சேர்மக்கனி, தேவி கலந்து கொண்டனர்.**



**கோவில்பட்டி அருகே கரிசல்குளத்தில் ரூ.8லட்சம் செலவில் கலையரங்கம் கட்டும்பணியை கடம்பூர்ராஜீஎம்.எல்.ஏ.தொடங்கிவைத்தார்.மத்தியஒன்றியசெயலாளர்யூனியன்வைஸ்சேர்மன் பழனிச்சாமி,இலக்கியஅணி மேற்கு ஒன்றியசெயலாளர் மாரிமுத்து, மூப்பன்பட்டி கிளைசெயலாளர் முருகன் கலந்துகொண்டனர்.**

# கோவில்பட்டி வ.உ.சி. அரசு மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.6 லட்சம் மதிப்பில் கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா



கோவில்பட்டி டிச 02

கோவில்பட்டி வ.உ.சி. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்கள் அமர்வதற்காக 6 லட்சம் மதிப்பில் பெஞ்ச் மற்றும் டெஸ்க் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் சுரேஸ்குமார் தலைமை வகித்தார். ஆசிரியர் ராஜசுந்தர் வரவேற்றார். ஏழாயிரம்பண்ணை அருகேயுள்ள மடத்துப்பட்டி இயற்கை விவசாய உரங்கள் தயாரிப்பு நிறுவனமான பொன்னூஸ் நேட்சுரல் புரொமோட்டர்ஸ் நிறுவனஅதிபர் தொழிலதிபர் பொன்னுச்சாமி பரஞ்ஜோதி தனது சொந்தநிதியில் இருந்து உள்கட்டமைப்பு வசதிக்காக 6லட்சம் மதிப்பில் உபயோகபொருட்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கி மாணவர்களை வாழ்த்திபேசினார். இனாம்மணியாச்சி முன்னாள் ஊராட்சிமன்ற தலைவரும், அட்சயா ஹோட்டல் அதிபருமான சுப்புராம், தொழிலதிபர்கள் டி.கணேசன், பி.கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து ஒன்றரை லட்சம் ரூபாயை பள்ளி உள் கட்டமைப்பு நிதியாக வழங்கினார். உதவி தலைமைஆசிரியர் அந்தோணிராஜ், ஆசிரியர்கள் கணேஷ், தமிழ் செல்வகுமார், விஜயகுமார், சிவகுமார், பசும்பொன், பிரபாகரன், நாராயணசாமி, விஜயகுமார், உட்பட ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். உதவி தலைமை ஆசிரியர் சுதாகரன் நன்றி கூறினார்.

திமுக சுற்றுச்சூழல் அணி சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி அங்கன்வாடி குழந்தைகளுக்கு எழுது பொருட்கள்

## பூங்கோதை ஆலடி அருணா, ஜெயபாலன் வழங்கினர்



**தென்காசி, டிச.2:** திமுக சுற்றுச்சூழல் அணி சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி அங்கன்வாடி குழந்தைகளுக்கு எழுது பொருட்களை முன்னாள் அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஆகியோர் வழங்கினர். உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் திமுக மாநில சுற்றுச்சூழல் அணி சார்பில், திமுக இளைஞரணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் பிறந்த தின விழா பல்வேறு நல உதவிகள் வழங்கி கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஆலங்குளம் வட்டார பகுதிகளில் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு எழுது பொருட்கள் மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆலங்குளம் மற்றும் புதுப்பட்டி அம்பேத்கர் காலனி, காசிநாதபுரம் பகுதியில் அங்கன்வாடி மையங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் வே . ஜெயபாலன் தலைமை வகித்தார். மாநில சுற்றுச்சூழல் அணித்தலைவரும், முன்னாள் அமைச்சருமான டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா கலந்து கொண்டு, குழந்தைகளுக்கு எழுது பொருட்கள் மற்றும் இனிப்புகள் வழங்கினார். தொடர்ந்து மரக்கன்றுகளை மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



சேலத்தில் நடக்கவிருக்கும் தி.மு.க இளைஞர் அணியின் 2 - வது மாநில மாநாட்டிற்கு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ.விடம் மாநகர் மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ர.ஜெயவிஷ்வதர்ஷன் 2 லட்சம் ரூபாயினை நன்கொடை நிதியாக வழங்கினார். உடன் மாநில பொது குழஉறுப்பினர் எம்.ஜி.முத்துகணேசன் உள்ளார்.

# திருமங்கலத்தில் நீதிமன்ற பணிகளிலிருந்து விலகி வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்



திருமங்கலம்.டிச.02.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் வழக்கறிஞர் சங்க உறுப்பினர் பிரகாஷ் கண்ணன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்தும், தாக்குதல் நடத்திய வர்களை உடனடியாக கைது செய்திட வலியுறுத்தியும் இரு நாட்கள் நீதிமன்ற பணி புறக்கணிப்பு மேற்கொண்ட வழக்கறிஞர்கள் காவல் துறையினரை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

திருமங்கலம் வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினர் பிரகாஷ்கண்ணன் மீது சிலர் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து அவர்கள் மீது திருமங்கலம் டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இதனிடையே வழக்கறிஞர் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்யாமல், தாக்குதல் நடத்தியவர்களிடமிருந்து புகாரினை பெற்று வழக்கறிஞர் பிரகாஷ் கண்ணன் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். இதனால் வழக்கறிஞர்களுக்கு எதிராக செயல்படும் திருமங்கலம் டவுன் காவல் துறையினரை கண்டித்து நேற்றும் நேற்று முன்தினமும் என இரண்டுநாட்கள் வழக்கறிஞர்கள் அனைவரும் நீதிமன்ற பணிகளிலிருந்து விலகி இருப்பது என முடிவு செய்யப்பட்டது.இந்நிலையில்

திருமங்கலம் வழக்கறிஞர் சங்க உறுப்பினர் பிரகாஷ் கண்ணன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித்தும், தாக்குதல் நடத்திய வர்களை உடனடியாக கைது செய்திட வலியுறுத்தியும், வழக்கறிஞர் மீதான வழக்குப் பதிவை ரத்து செய்திட வலியுறுத்தியும் நீதிமன்ற பணி புறக்கணிப்பு மேற்கொண்ட வழக்கறிஞர்கள் நேற்று நீதிமன்ற வளாகம் முன்பாக வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் ராமசாமி தலைமையிலும், செயலாளர் அறிவொளி முன்னிலையிலும் காவல் துறையினரை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# சாயல்குடியில் த.மு.மு.க. சார்பில் கட்டுரைப்போட்டி



கடலாடி, டிச. 2

சாயல்குடியில் தமுமுக சார்பில் தேசிய கல்வி தினத்தை முன்னிட்டு கட்டுரைப்போட்டி போட்டி நடைபெற்றது.

இராமநாதபுரம் தெற்கு மாவட்டம் தமுமுக- மமக -சாயல்குடி - நகர சமூக நீதி மாணவர் இயக்கத்தின் சார்பாக சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் அபுல் கலாம் ஆசாத் நமது இந்திய திருநாட்டிற்கு ஆற்றிய கல்வி சேவையை பாராட்ட அவரது பிறந்த நாளை தேசிய கல்வி தினமாக இந்திய அரசின் சார்பில் கொண்டாடப் படுகிறது. இந்த நாளை போற்றும் விதமாக சாயல்குடி நகர சமூக நீதி மாணவர் இயக்கத்தின் சார்பில் தேசிய கல்வி தின கட்டுரைப் போட்டி நடத்தி பரிசளிப்பு விழா சாயல்குடி நகர சமுதாயக்கூடத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாவட்டத் தலைவர் வாவா ராவுத்தர்-தமுமுக மாவட்ட செயலாளர் சம்சு கனி-மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் முகமது முஹிதுல்லா-மாவட்ட துணைத் தலைவர் ஜாகிர் உசேன். நகர தலைவர் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் சமூக நீதி மாணவர் இயக்கத்தின் நகர செயலாளர் செய்யது அகமது வரவேற்புரை ஆற்றினார்.

மேலும் இக் கூட்டத்தில் சமூக நீதி மாணவர் இயக்கத்தின் மாவட்ட செயலாளர் ஹபீப் ரஹ்மான் - கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத் சேவையை மாணவ மாணவிகளுக்கு எடுத்துக் கூறி சிறப்புரை ஆற்றினார். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக சாயல்குடி பேரூராட்சி சேர்மன் மாரியப்பன்- துணை சேர்மன் பாக்கியராஜ் மணிமேகலை - அரசுஆண்கள் பள்ளி தலைமையாசிரியர் ராஜ்குமார் -அரசு பெண்கள் பள்ளி தலைமை ஆசிரியை சங்கரி மற்றும் புதிய நடுநிலைப்பள்ளி உதவி தலைமை ஆசிரியர் உமையராஜன்-கடுகு சந்தை உதவி தலைமை ஆசிரியர் ஜெலஸ்டின் ராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினர்.

முதல் பரிசு 5000 ம்-இரண்டாவது பரிசு 3000 ம்- மூன்றாவது பரிசு 2000 ம்- நான்காவது பரிசு 1000-ம் மற்றும் நினைவுப்பரிசுகளும் வழங்கப்பட்டது. கட்டுரை போட்டியில் 240 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டன. மாவட்ட மருத்துவ அணி செயலாளர் ராஜா- மாவட்ட ஊடக அணி செயலாளர் தமிம் அகமது.-கடலாடி ஒன்றிய பொருளாளர் நெய்னா முகம்மது- து.த.அசாருதீன்-மமக நகர செயலாளர் செய்யது அப்தாஹிர்- தமுமுக நகர செயலாளர் முபாரக் முஸ்தபா- நகர மருத்துவ அணி செயலாளர் அலி இப்ராகீம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர இளைஞரணி செயலாளர் சிக்கந்தர் நன்றியுரை ஆற்றினர்.

# முதுகுளத்தூரில் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா வட்டக்கிளை மாநாடு



முதுகுளத்தூர், டிச. 2

முதுகுளத்தூரில் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா ஆண்டு வட்டக்கிளை மாநாடு நடைபெற்றது. விழாவிற்கு இராமநாதபுரம் மாவட்ட தலைவர் எஸ்.பழனிக்குமார் தலைமை தாங்கினார்.முதுகுளத்தூர் வட்டாட்சியர் வீ.சடையாண்டி வரவேற்பு பேசினார். மாவட்ட தலைவர் வே.சிங்கமுத்து துவக்க துரை நிகழ்த்தினார்.

மாவட்ட பொருளாளர் க.செல்லப்பா- மத்திய செயற்குழு உறுப்பினர் மா.சாந்தி- ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாநாடு ஒருங்கிணைப்பாளர் தினேஷ்பிரபு விழாவில் தீர்மானங்களை வாசித்தனர். மாவட்ட செயலாளர் ஜமால் முகம்மது-மாவட்ட துணைத்தலைவர்; பரமசிவன்-மாவட்ட இணை செயலாளர் காசிநாத துறை-கிராம நிர்வாக சங்க மாவட்ட பொருளாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாநாடு முடிவில் வட்டக்கிளை பொருளாளர் தேவி நன்றி கூறினார்.

# அழகர்கோவில் ராக்காயி அம்மன் சன்னதி மண்டபத்தில் நடந்த வருடாபிஷேக விழா



அழகர்கோவில், டிச.2 -

மதுரை அழகர்கோவில் மலையில் அதிசயவற்றாத நீரூற்றாக எப்போதும்வழிந்து கொண்டிருப்பது நூபுர கங்கை எனும் புனித தீர்த்தமாகும்.இங்குள்ள பிரசித்தி பெற்ற ராக்காயி அம்மன் சன்னதியில் கடந்த ஆண்டு கும்பாபிஷேக விழா சிறப்போடு நடந்தது.

இதை தொடர்ந்து நேற்று இக்கோவில் மண்டப வளாகத்தில் வருடாபிஷேக விழா நடந்தது. இதில் பட்டர்களின் வேத மந்திரங்களுடன்யாக பூஜைகள் நடந்தது. பின்னர் ராக்காயி அம்மனுக்கு பால், பழம், பன்னீர், தேன், விபூதி, மஞ்சள், சந்தனம், அரிசி மாவு, மற்றும் நூபுர கங்கை தீர்த்தம் உள்ளிட்ட 16 வகையான அபிஷேகமும், அலங்காரமும் பட்டர்களின் மந்திரங்களுடன் மஹா தீபாராதனைகள் நடந்தது.

மல்லிகை, ரோஜா, சம்மங்கி, துளசி, முல்லை, உள்ளிட்ட பல்வேறு வண்ணப்பூ மாலைகளினால் ராக்காயி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்து புனித நீராடி நெய் விளக்கேற்றி சாமி தரிசனம் செய்தனர். இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை கள்ளழகர் கோவில் அறங்காவலர் குழு தலைவர் வெங்கடாசலம், துணை ஆணையர் ராமசாமி, மற்றும் அறங்காவலர்கள், திருக்கோவில் பணியாளர்கள் செய்திருந்தனர் .

# ஒட்டன்சத்திரத்தில் இலவச மருத்துவ முகாம்: தி.மு.க. நிர்வாகிகள் துண்டு பிரசுரம் வழங்கல்



ஒட்டன்சத்திரம் .டிச.2

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இணைந்து நடத்தும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி நூற்றாண்டு விழா மாபெரும் இலவச சிறப்பு மருத்துவ முகாம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை அமைச்சர் அரசக்கரபாணி, நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, ஆகியோரது ஆலோசனையின் பேரில் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உட்பட்ட 18 வார்டு பகுதிகளிலும். நகர் மன்ற உறுப்பினர்கள், வார்டுசெயலாளர்கள், நிர்வாகிகள் பொதுமக்களிடம் வழங்கினர்

# முக்கிய கேம்டெவலப்பர்கள் வருகை: பலம் பெறுகிய இண்டஸ்ஆப் ஸ்டோர்

சென்னை, டிச 02-

நாடு முழுவதும் உள்ளபயனர்களுக்கு கேமிங் அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்த முன்னணி கேம்டெவலப்பர்களை ஆன்போர்டு செய்ததாக முற்றிலும் இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட ஆண்ட்ராய்டு அடிப்படையிலான மொபைல் ஆப்ஸ்டோரான இண்டஸ்ஆப் ஸ்டோர் அறிவித்தது. இந்த அற்புதமான நகர்வில் டிரீம் 11, நசாரா டெக்னாலஜிஸ்,ஏ23, எம்பிஎல், ஜங்கிலி ரம்மி, தாஜ் ரம்மி, ரம்மி பேரார்வம், ரம்மி கலாச்சாரம், ரம்மி டைம் மற்றும்

கார்ட்பாசி ஆகியவை இண்டஸ்ஆப் ஸ்டோர் உடன் கூட்டு சேர்ந்துள்ளன. இந்த கூட்டாண்மை லட்சக்கணக்கான பயனர்களுக்கு கேமிங் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும் என உறுதியளிக்கிறது. இது பன்முகத்தன்மை மற்றும் புதுமைக்கான இண்டஸ்ஆப் ஸ்டோர்இன் அர்ப்பணிப்புடன் பொருந்தக்கூடிய பலதரப்பட்ட தரமான கேம்களை வழங்குகிறது. இன்--ஆப்பேமண்ட்களுக்கு 130%வரை பெரும் கட்டணத்தை வசூலிக்கும் பிற ஆப்ஸ்டோர்களுக்கு முற்றிலும்மாறாக, கமிஷன்களை வசூலிக்காமல் டெவலப்பர்களை ஆதரிப்பதன் மூலம் இண்டஸ்ஆப் ஸ்டோர் அதன் அர்ப்பணிப்பைஎடுத்துக்காட்டுகிறது

இது குறித்து ரம்மி Passion-ன் தலைமை மார்க்கெட்டிங் அதிகாரி, அமன்தீப் சிங் கூறுகையில், இண்டஸ்ஆப் ஸ்டோரில் எங்கள் தயாரிப்பான ரம்மிபேஷனை அளவிட நாங்கள் ஆவலுடன் காத்திருக்கிறோம், மேலும் எங்களுக்காக காத்திருக்கும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வாய்ப்பை ஆராய ஆர்வமாக உள்ளோம். இண்டஸ்ஆப்ஸ்டோரின்இந்திய-அடிப்படையிலான ஆதரவுக்குழு தனித்து நிற்கிறது. நிகழ்நேர மற்றும் அர்ப்பணிப்புள்ள ஆதரவை வழங்குகிறது.இது தடையற்றபயனர் அனுபவத்தை உறுதிசெய்யும் விலைமதிப்பற்ற ஆதாரமாகும். பரவலான பயனர் தயாரிப்பு தத்தெடுப்பு மற்றும் ஈடுபாட்டை அடைய இந்த கூட்டாண்மை எங்களுக்கு உதவும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார்.

# பசுமை போக்குவரத்து மீது கூட்டுமுயற்சியில் ஈடுபடும் எஸ்ஏஜசி மோட்டார் மற்றும் ஜே எஸ்டபிள்யூ குழுமம்

மதுரை, டிச 02-

110 மில்லியன் யுஎஸ் டாலர் ஆண்டு வருவாயுடன் 100-க்கும் அதிகமான நாடுகளில் செயல்பட்டு வரும் ஃபார்ச்சூன் 500 நிறுவனமான எஸ்ஏஜசிமோட்டார் மற்றும் பல்வேறு தொழில் பிரிவுகளில் செயல்பாடுகளுடன் 23 பில்லியன் யுஎஸ் டாலர் வருவாயுடன் இந்தியாவின் முன்னணி பெருதொழில்நிறுவனமாகத் திகழும் ஜேஎஸ்டபிள்யூ குழுமம் ஆகியவை ஒருங்கிணைந்து, ஒரு முக்கிய கூட்டு முயற்சியில் ஈடுபடுவதை அறிவித்திருக்கின்றன. இந்தியாவில் ஒரு முன்னணி கார் நிறுவனமான எம்.ஜி.மோட்டாரின் வளர்ச்சியை மேலும் துரிதமாக்கும் நோக்கத்தோடு, பங்குதாரர் ஒப்பந்தம் மற்றும் பங்குகளை வாங்குதல் மற்றும் பங்குகளுக்கான சப்ஸ்கிரிப்ஷன் ஒப்பந்தங்களில், லண்டனில் உள்ள எம்ஜி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் எஸ்ஏஜசி - ன் பிரசிடென்ட் வாங் ஜியாக்யூ மற்றும் ஜே எஸ்டபிள்யூ குழுமத்தின் பார்த் ஜிண்டால் ஆகியோர் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

ஆட்டோமொபைல்கள் துறையிலும் மற்றும் புதிய தொழில்நுட்ப களத்திலும் தங்களது ஆதாரவளங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் கூட்டிணைவு சக்தியை எஸ்ஏஜசி மோட்டார் மற்றும் ஜே எஸ்டபிள்யூ குழுமம் இணைந்து உருவாக்கும். உள்நாட்டளவில் கொள்முதல் செய்தல், மின் வாகனங்களுக்கான சார்ஜிங் கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவது பல்வேறு புதிய முன்னெடுப்பு திட்டங்களையும் இந்த கூட்டுமுயற்சி நிறுவனம் மேற்கொள்ளும். கையெழுத்திடப்பட்டிருக்கும் இவ்வொப்பந்தத்தின் படி, இந்திய கூட்டுமுயற்சி இயக்க செயல்பாடுகளில் 35% பங்கை ஜே எஸ்டபிள்யூ கொண்டிருக்கும். இந்திய நுகர்வோர் மீது நிலையான கூர் நோக்கத்துடன் மிகச்சிறப்பான போக்குவரத்து தீர்வுகளை வழங்க மேம்பட்ட தொழில்நுட்பத்தையும், தயாரிப்புகளையும் இந்த கூட்டுமுயற்சி நிறுவனத்திற்கு வழங்கி ஆதரவளிப்பதை எஸ்ஏஜசிதொடரும்.

# நத்தம் பகுதியில் பள்ளி கட்டிடங்களுக்கு பூமி பூஜை அமைச்சர் சக்கரபாணி தொடங்கி வைத்தார்



நத்தம், டிச,2

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே லிங்கவாடி அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் நத்தம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் 4 கோடியே 57 லட்சம் மதிப்பில் கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கான பூமிபூஜை விழா நேற்று நடந்தது. இதற்கு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தலைமை தாங்கி பூமிபூஜை விழாவை தொடங்கி வைத்தார்.முன்னதாக செந்துறை-பெரியூர்பட்டி மற்றும் சித்திரைகவுண்டன்பட்டியில் புதிய பள்ளி வகுப்பறை கட்டிடங்களை அமைச்சர் சக்கரபாணி திறந்து வைத்தார்.

இதில் திண்டுக்கல் எம்.பி வேலுச்சாமி, முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம், திமுக மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன்,திமுக ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், பழனிச்சாமி, நத்தம் பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா, நகர செயலாளர் ராஜ்மோகன், சாணார்பட்டி ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜன்,மோகன், மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, தாசில்தார் ராமையா, உள்ளிட்ட ஊரக வளர்ச்சிதுறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உசிலம்பட்டி 58 கால்வாயில் தண்ணீர் திறக்க கோரி விவசாயிகள் போராட்டம்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பங்கேற்பு

மதுரை,டிச. 02-

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் 58 பாசன விவசாயிகள் சங்கத்தின் சார்பில், மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டார்.

அதை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் பேசியதாவது:

தமிழகம் முழுவதும் விவசாயிகள் பாசனத்திற்கு தண்ணீரை கேட்டு கண்ணீருடன் போராடி வருகிறார்கள். ஆனால் விவசாயிகளைத் தொடர்ந்து திமுக அரசு வஞ்சித்து வருகிறது. வைகை அணையில் 68 அடி இருக்கும் பொழுது, தண்ணீரை 58 கால்வாய்க்கு எடப்பாடியார் திறந்து விட்டார். தொடர்ந்து ஐந்து முறை தண்ணீர் திறக்கப்பட்டது. எடப்பாடியார் ஆட்சி காலத்தில் காவிரி டெல்டா பாதுகாக்கப்பட்டது, 50 ஆண்டு கால காவிரி பிரச்சனை தீர்க்கப்பட்டது, நதிநீர் இணைப்பு திட்டத்தை செயல்படுத்தினார். குறிப்பாக தென் மாவட்டங்களில் நீர் மேலாண்மையை திட்டங்களை செய்தார்.

தற்போது 58 கால்வாயில் நிரந்தர அரசாணையை இன்னும் திமுக அரசு வழங்கவில்லை. அக்டோபர், நவம்பர்,டிசம்பர் ஆகிய காலங்களில் வடகிழக்கு பருவமழை பெய்யும் தற்போது கூட சென்னையில் புயலால் பாதிக்கப்பட்டுள்ளது வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அதனைத் தொடர்ந்து முல்லை பெரியார் பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது. இந்த விவசாயிகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். ஆனால் முதலமைச்சருக்கு மனமில்லை அதனால் விவசாயிகளுக்கு தண்ணீர் இல்லை.

இனிமேல் தண்ணீரை திறக்க மறுத்தால் உசிலம்பட்டியில் விவசாயிகள் போராட்டம் வெடிக்கும். தற்போது அதிகாரிகள் ஆய்வு செய்து அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் கோரிக்கை நிறைவேற்றுவது அரசின் தார்மீக கடமை, அந்த தார்மீக கடமையை செய்ய தவறினால் இந்த அரசை மக்கள் தூக்கி எறிவார்கள்விவசாயத்திற்காக எந்த போராட்டத்தில் எடுத்தாலும் அதற்கு அ.தி.மு.க. முதன்மையாக தோள் கொடுத்து நிற்கும் எனக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.மகேந்திரன்,கா.தவசி,பா.நீதிபதி, கே.தமிழரசன், எஸ் எஸ் சரவணன், மாணிக்கம், மாநில நிர்வாகிகள் வெற்றிவேல், ஜெயக்குமார், தனராஜன், ஏகேபி சிவசுப்பிரமணியன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்லம்பட்டி ராஜா, பிச்சைராஜன், காளிதாஸ், ரவிச்சந்திரன், அன்பழகன், ராமையா, உசிலம்பட்டி நகர செயலாளர் பூமா ராஜா, பொதுக்குழு உறுப்பினர் சுதாகரன்,மாவட்ட அணி நிர்வாகிகள் தமிழழகன், செல்லம்பட்டி ரகு, மகேந்திர பாண்டி, காசிமாயன், துரைப்பாண்டி, உசிலை குணசேகரன், உசிலை டாக்டர் விஜயபாண்டியன் உட்பட பலர் இருந்தனர்.

## முன்னாள் அமைச்சர் பாஸ்கரன் தலைமையில்

# அருப்புக்கோட்டை நகர அ.தி.மு.க. சார்பாக பூத் கமிட்டி ஆய்வு கூட்டம்



அருப்புக்கோட்டை. டிச.2.

அருப்புக்கோட்டையில் திருச்சுழி சாலையில் உள்ள அதிமுக அலுவலகத்தில் அதிமுக பூத் கமிட்டி ஆய்வு கூட்டம் முன்னாள் அமைச்சர் பாஸ்கரன் தலைமையில் மாவட்டச் செயலாளர் ரவிச்சந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் பூர்த்தி செய்யப்பட்ட பூத் கமிட்டி புத்தகங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மேலும் பூத் கமிட்டி குறித்து நகர அதிமுக நிர்வாகிகளிடம் முன்னாள் அமைச்சர் பாஸ்கரன் கேட்டறிந்தார். இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகர அதிமுக செயலாளர் சக்திவேல் பாண்டியன் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பாம்பன் துறைமுகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

ராமேசுவரம்,டிச.2

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் பலத்த சூறாவளி காற்று உருவாகி புயலாக மாறி இருப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீனவர்களுக்கு தெரிவிக்கும் வகையில் பாம்பன் துறைமுகத்தில் புயல் எச்சரிக்கை 1 ஆம் எண் கூண்டு நேற்று ஏற்றப்பட்டது.

வங்கக் கடலில் கடந்த வியாழக்கிழமை கிழமை காற்றழுத்த தாழ்வு மண்டல சுழற்சி உருவாகியது.

இந்த மண்டல சுழற்சியானது சூறாவளி காற்றாக மாறி மன்னார் வளைகுடா,பாக்ஜலசந்தி ஆகிய கடல் பகுதியில் பலத்த சூறாவளி காற்று அலையுடன் வீசி வந்தது. இந்த நிலையில் இன்று இந்த சூறாவளி காற்று புயலாக மாறுவதாக வானிலை மையம் எச்சரித்து உள்ளது. ஆதலால் கடந்த இரண்டு நாட்களாக மன்னார் வளைகுடா,பாக்ஜலசந்தி ஆகிய கடல் பகுதியில் தமிழகப் பகுதியிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டது.

அதன் ஒரு பகுதியாக ராமேஸ்வரம் மண்டபம், பாம்பன் ஆகிய பகுதியில் இருந்து தென்கடல் மற்றும் பாக்ஜலசந்தி கடலோரப் பகுதியில் மீன் பிடிக்க செல்ல மீனவர்களுக்கு மீன்வளத் துறை அதிகாரிகள் மீன்பிடி அனுமதிச்சீட்டு நிறுத்தி மீன் பிடிக்க செல்ல தடை விதித்தனர்.

அதன் பேரில் கடந்த இரண்டு நாட்களாக இந்த பகுதியிலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. கடலில் பாதுகாப்பாக படகுகளை நிறுத்தி கண்காணித்து வருகின்றன. இந்த நிலையில் மன்னர் வளைகுடா ஆழ் கடல் பகுதியில் உருவாகும் புயல் தமிழக பகுதியை இன்று அல்லது நாளை கடந்து செல்கிறது.

ஆதலால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாம்பன் துறைமுகத்தில் புயல் எச்சரிக்கை 1 ஆம் எண் கூண்டு நேற்று ஏற்றப்பட்டது. கரையோரத்தில் வசித்து வரும் மீனவர்கள் பாதுகாப்பாக இருக்கவும் மீன்வளத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

மரம்
மனிதனின்
உரம்

